[16th November 1965

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The Superintending Engineer (Planning Circle) after conducting a preliminary investigation into the scheme submitted a report to the Chief Engineer (Irrigation). The Chief Engineer's report in the matter was considered by Government and the scheme has been deferred for the present.

■ 324 கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) செஞ்சி தாலுகா வாராக நதியில் (கடலி கிராமத்தில்) ஏற்கனவே கட்டி உடைந்துபோயுள்ள அணையை நீர்ப்பாசன இலாகா பிளானிங் சர்க்கிள் சூபரின்டெண்டிங் இன்சினியர் பார்வையிட்ட ரிப்போர்ட்டு அரசாங்கத்திற்குக் கிடைத்ததா ?

(இ) அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : (a) The Superintending Engineer has submitted his report to the Chief Engineer (Irrigation).

(b) The proosals are under examination by the Chief Enginee (Irrigation).

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த வராக நதி நீர்த்தேக்கத்தை எந்த இடத்தில் கட்ட திட்டம் போட்டு இருக்கிறது என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கேள்வி உடைந்துபோன ஏரியைத் திருப்பிக் கட்டுவது சம்பந்தப்பட்டது. அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

மன்னி ஆற்றுப்பாசனம்

* 325 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலுகாவிலுள்ள 'மன்னி' ஆற்றில் பாசன வசதி சரியில்லை என்றும், பாசன வசதி செய்து தரவேண்டுமென்றும் கோரி ரயத்துக்களிடமிருந்து சர்க்காருக்கு அண்மையில் விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The paucity of supply in Manniar is due to formation of heavy silt at its head, on account of its bed level being lower than Cauvery. Large amount of silt was removed last year by bull dozers and a silt ejector has been constructed this year which has reduced silt entering the river. Necessary proposals for solving the problem, permanently, are under consideration of the Chief Engineer.

6th November 1965]

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்த சிறிய நீர்ப் பாசன திட்டத்தின் கீழ் இந்த வேலைக்கு நிதி ஒதுக்கப்பட்டு, தண்ணீர் வந்துவிட்டதால், அந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டது. அந்த வேலையைத் திருப்பிச் செய்ய உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னிடத்தில் உள்ள தகவல்படி, சில்ட் படிந்து, அதை நீக்க புல்டோஸர் போன்றவைகள் உபயோகிக்கப்பட்டும், அதோடு அல்லாமல், சில்ட் எஜக்ட்டர் என்ற அமைப்பையும் ஏற்படுத்தி, அதை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், இதெல்லாம் தாற்காலிகப் பரிகாரங்கள்தான். நிரந்தரமாக சில்ட் தங்காமல் இருக்க பூண்டி ரிசர்ச் ஸ்டேஷனிலே ஆராய்ச்சி செய்துகொண்டு இருக்கிறார்கள். அதில் முடிவு ஏற்பட்டவுடனே, வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்கள்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்த ஆற்றில் ஏறத் தாழ பத்து ஆண்டு காலமாக நீர்ப்பாசன வசதி இல்லாமல் இருக்கிறது என்று ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. வருஷா வருஷம் நடவடிக்கை எடுப்பதும், தண்ணீர் வந்தவுடன் நிறுத்தி விடுவதும், இப்படி ஆண்டுக்காண்டு நடந்து கொண்டிருக்கிறது. வருகிற பசலிக்குள்ளாகவாவது, நடவடிக்கைகளை நடைமுறைக்கு கொண்டு வந்து, தூர் வாருவதோ, வேறு என்ன செய்வதோ செய்து, வேலைகள் செய்யப்படும் என்கிற உறுதியை அரசாங்கம் அளிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சில்ட் ப்ராப்ளம் பொருத்தவரை, தாற்காலிகமாக எதையும் செய்வது போதாது, நிரந்தரமாக இருக்கும் வகையில் ஏதாவது செய்தாகவேண்டும். 'Silt has a continuous movement' அதனால், மேலும் மேலும் சில்ட் படிந்துவிடாமல், பாதுகாக்க, நிரந்தரமாக ஆராய்ச்சி செய்யவேண்டும். இப்பொழுது அது 'பூண்டி ரிசர்ச் ஸ்டேஷனில்' நடந்துகொண்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சி நடைபெற்று வேலை இந்த ஆண்டு துவங்கும் என்று தாற்காலிகமாகச் செய்யும் வேலையைக்கூட டிபார்ட்டுமெண்டார் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட வேலைகளையாவது உடனடியாகச் செய்து அந்தப் பகுதி நிலங்களுக்கு சாகுபடி செய்ய வசதி செய்துகொடுக்க சர்க்கார் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : முன்பு இருந்த நிலையை விட இப்பொழுது இருக்கும் நிலை மாறுபட்டிருக்கிறது. விவசாயிகளுடைய கஷ்டத்தை இலாகாவினர் உணர்ந்து இருக்கிறதனால், தாற்காலிக வேலைகளைச் செய்து வருகிறார்கள். ஆனால், நிரந்தரமாக சில்ட் மூவ்மெண்டை தடைசெய்ய ஒரு நிரந்தர அமைப்புத் தேவை. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.